பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 22 திங்கட்கிழமை 08.11.2021 கதிர் 231

## வடக்கில் நவ. 13 வரையில் மழை

வடக்கு மாகாணத்தில் இன்று முதல் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது எனக் கூறியிருக்கும், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜா, கடற்பகுதி கொந்தளிப்பாக இருக்கும் எனவும், மீனவர்கள் கடற்றொழிலுக்கு ☞2

## அருட்தந்தை சிறில் காமினிக்கு ஆதரவாக புதுக்கடை நீதிமன்றத்தின் முன் போராட்டம்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டார் என்ற காரணத்தை வைத்து அருட்தந்தை சிறில் காமினியை கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் குற்றம் சுமத்தி இன்று கொழும்பு புதுக்கடைநீதிமன்றத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ☞2

## அருட்தந்தை இப்போது கைதுசெய்யப்படமாட்டார்

### குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிவிப்பு



அருட்தந்தை சிறில் காமினி தற்போது கைது செய்யப்படமாட்டார் எனக் குற்றப் புலானய்வுப் பிரிவு சட்டமா அதிபரின் ஊடாக உயர்நீதிமன்றத்துக்கு இன்று அறியப்படுத்தியுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் தான் கைதுசெய்யப்படுகின்றமையை தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி அருட்தந்தை சிறில் காமினி உயர் நீதி ☞2

# கோட்டா அரசை வீட்டுக்கு அனுப்ப அனைவரும் ஒன்றிணையுங்கள்!

## யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி. அறைகூவல்



**(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.**


**– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.** ☞2

## தீவகத்தில் இன்று மூன்று இடங்களில் காணி அளவிடும் நடவடிக்கை முறியடிப்பு



**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம் மாவட்டம், வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டமூன்றுஇடங்களில் இன்று இடம்பெறவிருந்த காணி அளவிடும் நடவடிக்கைகள் தற்காலிகமாகத் தடுத்து ☞2



### மக்கள் விடுதலை முன்னணியின்

## ‘ஊரிலிருந்து தொடங்குவோம்’ செயற்றிட்டம் யாழில் ஆரம்பம்

(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)

மக்கள் விடுதலை முன்னணியின் ‘ஊரிலிருந்து தொடங்குவோம்’ என்ற தொனிப்பொருளிலான மக்களுடனான உரையாடலும் துண்டுப்பிரசுர விநியோகமும் யாழ்ப்பாணத்தில் ☞2

## யாழில் கரையொதுங்கிய ஆணொருவரின் சடலம்!

### இந்திய மீனவராக இருக்கலாம் எனச் சந்தேகம்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், காரைநகர், கோவளம் கடற்பகுதியில் அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இன்று மதியம் கடலுக்குச் சென்றவர்கள் சடலத்தை அவதானித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சடலம் அழுகிய நிலையில் ☞2

## 24 மணிநேரத்தில் 45 பேர் சிக்கினர்!

தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகம் இன்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் பரிதாபச்சாவு!

ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிக்கவெவ பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

ரம்பாவ என்ற இடத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த குறித்த குடும்பஸ்தர் அங்கு காவலுக்குச் சென்றுள்ளார். ☞2

## இலங்கையிடம் சீன நிறுவனம் 80 லட்சம் டொலர் நட்டஈடு கோரல்

விஞ்ஞான ரீதியான பரிசோதனை முடிவுகளை மீறி, சோதனை முடிவுகளைத் தவறாகக் குறிப்பிட்டமை மற்றும் பொய்யான சோதனை முடிவைக்கொண்டு தவறான பிரசாரங்களை முன்னெடுத்தமை என்பவற்றுக்காக, விவசாய அமைச்சின் கீழுள்ள தேசிய தாவரத் தடுப்புக் காப்பு சேவையிடமிருந்து 8 மில்லியன் (80 லட்சம்) அமெரிக்க டொலர் நட்டஈடு கோரி ☞2

## ஓமந்தை ஈயத் தொழிற்சாலை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

**(வவுனியா நிருபர்)**

வவுனியா, ஓமந்தைப் பகுதியில்அமைந்துள்ளஈயத்தொழிற்சாலையில் ஈயம் உருக்கும் ஆலையில் காணப்பட்ட உருக்குக் கல் இடிந்து விழுந்த ☞2

## அருட் தந்தை சிறில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கத்தோலிக்க மதகுருமார் உட்பட்ட பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

## அருட் தந்தை இப்போது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனு இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நிலையிலேயே சட்ட மா அதிபர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

## கோட்டா அரசை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்தில் இன்று 'ஊரிலிருந்து தொடங்குவோம்' என்ற செயற்றிட்டத்தை ஆரம்பித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசானது மக்களை ஏமாற்றும் தனது நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. குறிப்பாக இராணுவத்தைப் பயன்படுத்தி சேதன விவசாயத்தை வலுக்கட்டாயமாகத் தான் முன்னெடுப்பேன் என ஜனாதிபதி தெரிவிக்கும் அளவுக்கு இந்த நாட்டில் அராஜகம் காணப்படுகின்றது.

இந்த நாட்டில் தற்போது பால் மா, எரிவாயு போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் இந்தக் கோட்டாபய அரசானது தனது குடும்ப ஆட்சியை மென்மேலும் அதிகரித்து இந்த நாட்டில் அராஜகம் புரிந்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் ஒரு கோடி மக்கள் விவசாயிகளாக உள்ள நிலையில் ஒரு நெற்கதிர் என்றால் என்னவென்று தெரியாத ஜனாதிபதி தான் தற்போது விவசாயப் புரட்சி ஏற்படுத்துகிறேன் எனக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார்.

விவசாயப் பெருமக்களுடன் கலந்துரையாடியே சில முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால், விவசாயி அல்லாத விவசாயத்துறையைப் பற்றி தெரியாத ஒருவர் நாட்டில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்குரிய தீர்மானங்களை எடுப்பது ஒரு வியப்பான விடயமாகும்.

இந்த ஆட்சியை மாற்றி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

## 24 மணிநேரத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கமைவாக நாட்டில் இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 907ஆக அதிகரித்துள்ளது.

## கட்டுத்துவக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையிலேயே, கட்டுத்துவக்கு வெடித்தது எனத் தெரியவருகின்றது.

தற்போது இவரது சடலம் ஹொரவப்பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹொரவப்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## இலங்கையிடம் ....

சர்ச்சைக்குரிய சீன உர நிறுவனம் சட்டக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில், தேசிய தாவரத் தடுப்புக் காப்பு சேவையின் அலட்சியத்தாலும் மற்றும் தவறான அறிக்கைகள் காரணமாகவும் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது எனச் சீன உர நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட, ஹிப்போ ஸ்பிரிட் கப்பலில் உள்ள சேதன உரத்தில் 'அர்வீனியா' எனப்படும் தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்கள் இல்லை என்றும், அதில் அதிக பாதுகாப்பான மற்றும் அதிக திறன் கொண்ட சேதன உரமே இருக்கின்றது என்றும் சீன கிண்டாவோ சீவிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி கடிதம் கிடைத்த மூன்று நாள்களுக்குள் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த சட்டக் கடிதம் குறித்து தேசிய தாவரத் தடுப்புக் காப்பு சேவையின் மேலதிக பணிப்பாளர் வைத்தியர் துஷார விக்கிரமாராச்சியிடம் ஊடகங்கள் வினவியபோது, இதுவரை தமக்கு அக்கடிதம் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை என்று பதிலளித்துள்ளார்.

## வடக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்வதைத் தவிர்ப்பது நல்லது எனவும் எச்சரித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது:-

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் காற்று ஒருங்கிணைவு காரணமாக இன்று முதல் (திங்கட்கிழமை) வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

அதேவேளை, வங்காள விரிகுடா கடற்பகுதியின் தென்கிழக்கு பகுதியில் தோன்றியுள்ள தாழமுக்கம் காரணமாக இன்று (08) பிற்பகலுக்கு பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக கனமானது முதல் மிகக் கனமான மழை கிடைக்க வாய்ப்புள்ளது. இது எதிர்வரும் 13ஆம் திகதி வரை தொடரும்.

நாளை (09) முதல் தாழமுக்கம் மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும். எனவே, மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்ப்பது நல்லது.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் களைநாசினி விசிறுதல் மற்றும் உரமிடுதல் செயற்பாடுகளை எதிர்வரும் 13ஆம் திகதி வரை தவிர்ப்பது நல்லது - என்றார்.

## யாழில் கரையொதுங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணப்பட்டது.

குறித்த நபர் உயிரிழந்து ஒரு வாரத்துக்கு மேல் இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

அண்மையில் இந்தப் பகுதிகளில் யாரும் காணாமல்போனார் என பொலிஸ் பதிவுகள் இல்லாமையால், இந்தியாவைச் சேர்ந்தவர்களின் சடலமாக இருக்கலாமா என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தியாவின் நாகை மாவட்டத்தில் 3 நாள்களுக்கு முன்னர் பழனி என்ற ஒரு மீனவர் காணாமல்போயிருந்தார். அவ்வாறு காணாமல்போயிருந்த மீனவரின் உடலமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகம் ஊடாக உயிரிழந்தவரை அடையாளம் காணும் பணி முன்னெடுக்கப்படுகின்றது.

இதேநேரம், இவ்வாறு மீட்கப்பட்ட உடலம் அடையாளம் காணப்பட்டாலும் உடலம் மிகவும் சிதைவடைந்து காணப்படுவதால் நீதிமன்ற அனுமதியைப் பெற்று இங்கேயே அடக்கம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஊரிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பமானது.

இன்று காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பித்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க, அக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது வியாபாரிகளிடமும் பொதுமக்களிடமும் இந்த அரசின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன் ஆட்சி மாற்றத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

இந்தச் செயற்றிட்டமானது மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமங்களிலும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## தீவகத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறுத்தப்பட்டுள்ளன.

காணி உரிமையாளரின் ஒப்புதல் இல்லாமல் அல்லைப்பிட்டி ஜே/10 கிராம சேவகர் பிரிவில் 7 பரப்புக் காணியும், மண்கும்பான் ஜே/11 கிராமசேவகர் பிரிவில் 8 பரப்புக் காணியும் மற்றும் புங்குடுதீவு ஜே/24 கிராமசேவகர் பிரிவில் 14.2 ஏக்கர் காணியும் கடற்படையினருக்குச் சுவீகரிப்பதற்கான அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் நில அளவைத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்தது.

இருப்பினும் குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, காணி அளவீட்டு நடவடிக்கைகளைத் தற்காலிகமாகக் கைவிட்டு செல்கிறோம் எனக் கூறிவிட்டு நில அளவைத் திணைக்களத்தினர் அவ்விடத்தில் இருந்து சென்றனர்.

## ஓமந்தை ஈயத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தில் தொழிலாளி ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, ஓமந்தை, அரச வீட்டுத் திட்டத்தை அண்மித்துக் காணப்படும் ஈயத் தொழிற்சாலையில் ஈயத்தை உருக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஆலையின் உள்ளே காணப்பட்ட உருக்குக் கற்களை மாற்றீடு செய்வதற்காக மூவர் இணைந்து அவற்றை அகற்றியுள்ளனர்.

இதன்போது குறித்த ஆலையில் இருந்த உருக்குக் கல் உடைந்து விழுந்தமையால் அங்கு பாதுகாப்பற்ற முறையில் கடமையில் ஈடுபட்ட தொழிலாளி ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

அவரது தலையில் கல் விழுந்தமையினாலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

மாத்தளைப் பகுதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலு உதயராஜ் (வயது 38) என்பவரே மரணமடைந்தவராவார்.

அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)



விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தனக்கு வந்தால்தான் தெரியும்

'தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்' என்ற முதுமொழி ஒன்று உண்டு.

இதுவரை காலமும் கொழும்புக்கு முண்டு கொடுத்து வந்த சீனாவுக்கு, இப்போதுதான் கொழும்பு ஆட்சிப் பீடத்தின் நீதி, நியாயமான பண்பியல்புப் போக்குப் புரிய தொடங்கியிருக்கும்.

தனக்கும் கொழும்புக்கும் இடையிலான கருத்து முரண்பாட்டில் – முரண்பாட்டின் ஒரு தரப்பே – கட்சிக்காரனாகவும் அதேசமயம் நீதிபதியாகவும் இருப்பதின் ஆழமான தாக்கத்தை இப்போதுதான் பீஜிங் ஆட்சிப்பீடம் உணரும் சூழல் வந்திருக்கின்றது. எல்லாம் நன்மைக்குத்தான்.

தான் அனுப்பிய சேதன உரத்தில் தீங்கை ஏற்படுத்தும் இர்வினா என்ற பக்டீரியா உற்பத்தியாகும் சாத்தியம் இருப்பதாக இலங்கையின் 'தேசிய தாவரவியல் தனிமைப்படுத்தல் சேவை' அமைப்பு அறிக்கை வழங்கியமையை கடுமையாக ஆட்சேபித்து உள்ளது சீனா.

இந்தச் சோதனை உரத்தை அனுப்பிய சீன நிறுவனம், அதனை இலங்கை ஏற்றுக்கொள்ளாமையால் தனக்கு உடனடியாக ஏற்பட்டுள்ள நஷ்டத்துக்கு இழப்பீடாக 80 லட்சம் அமெரிக்க டொலரை (சுமார் 190 கோடி ரூபாவை) இழப்பீடாக செலுத்துமாறு மேற்படி இலங்கையின் தேசிய தாவரவியல் தனிமைப்படுத்தல் சேவை அமைப்புக்கு தனது சட்டத்தரணி மூலம் நிபந்தனைக் கடிதம் அனுப்பி இருக்கின்றது. இந்தத் தொகையை மூன்று நாள்களில் செலுத்தும்படியும், மேற்படி அமைப்பின் தவறான சோதனை அறிக்கையினால் தனது நிறுவனத்தின் பெயருக்கு ஏற்பட்ட களங்கம், அபகீர்த்தி போன்றவற்றுக்காக மேலும் ஒரு தொகை செலுத்தப்பட வேண்டியிருக்கும் என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

இலங்கையில் இந்த விடயங்களைப் பரிசோதித்து அறிக்கை பெறும் தகுதி கொண்ட மேற்படி அமைப்பு, இந்தச் சேதன உரத்தின் மீது இரண்டு தடவைகள் சோதனை நடத்தி, ஒரே முடிவுக்கு வந்திருப்பதாக இலங்கை அரசு தரப்பு கூறுகின்றது. ஆனால் அந்த சோதனை முறைமையே முற்றிலும் தவறானது என காட்டமாக விமர்சித்திருக்கும் சீனா, இந்த அமைப்பின் சோதனை முறைமைகள் சர்வதேச நியமங்களுக்கு அமைந்தவை அல்ல என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

பிரச்சினை இலங்கைக்கும் சீனாவுக்கும். இலங்கையின் சோதனை முறைமைகள் தவறானவை, சர்வதேச நியமங்களுக்கு மாறானவை என்று சீனா குற்றஞ்சாட்டுகின்றது. அப்படியானால் சீனாவையும் சாராத, இலங்கையையும் சேராத, பொது தரப்பினால், சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அந்தச் சேதனப் பசளையைச் சான்று பரிசோதனைக்கு உட்படுத்தினால் பிரச்சினை தீர்ந்து விடும் அல்லவா என்ற கேள்வி எழுகிறது.

ஆம். ஆனால் அதற்கு இலங்கை சம்மதிப்பதாக இல்லை என்பதுதான் சீனாவின் ஆதங்கம், எரிச்சல், சிக்கல் எல்லாமே.

யுத்தக் குற்றச்சாட்டு விவகாரத்திலும் இதுதான் நிலைமை. குற்றச்சாட்டு இலங்கை அரசின் மீதும், இலங்கைப் படைகள் மீதும். ஆனால் அவற்றை மற்றைய தரப்பான தமிழர்கள் நம்பிக்கையே வைக்க முடியாத இலங்கையின் நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரிக்கலாம், நடுநிலையான சர்வதேச தரப்புகளால் அல்ல என்று பிடிவாதம் பிடிக்கிறது கொழும்பு. குற்றம் சுமத்தப்படும் தரப்பே நீதிபதியாகவும் இருக்கும் நீதி முறைமை பரிகாசத்துக்கு உரியது என்று இவ்விடயத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டியபோது, அச்சமயம் கொழும்புக்கு அவ்விடயத்தில் முழு ஆதரவாக நின்றது சீன அரசு. அதனால் இப்போது உரப் பிரச்சினையில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பொது தரப்பின் பரிசோதனை முடிவைக் கோர முடியாமல் முழிக்கின்றது அது.

தனக்கு வந்தால்தான் தலையிடியும் காய்ச்சலும் புரியும். இலங்கையின் நடுநிலை நீதிப் போக்கின் தாற்பரியம் இப்போது சீனாவுக்கு புரியும் என்று நம்பலாம்.

# எமது கோரிக்கைகளுக்கும் அரசு மதிப்பளிக்க வேண்டும்

## திஸ்ஸ விதாரண உருக்கம்



மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கத்தின் பங்காளி கட்சிகளின் கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளித்து செயற்பட வேண்டும் என ஆளுங்கட்சி உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதனை செய்யத் தவறினால் எமக்குமாற்றுவழி ஒன்றை தேடிக்கொள்ள வேண்டி வரும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர், பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் தனித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதன் பின்னணி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுத்தேர்தலுக்குப் பின்னர் கடந்தவாரம்வரையும் கட்சித் தலைவர்கள் என்ற அடிப்படையில் ஒரு தடவையேனும் ஜனாதிபதியோ பிரதமரோ தம்மை அழைத்துக் கலந்துரையாடியதில்லை என்றும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

இருப்பினும் மக்களின் பிரச்சினை, நாட்டின் பொருளாதார பிரச்சினை போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தில் இருக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் ஒன்றிணைந்து கலந்துரையாடி வருகின்றன என அவர் தெரிவித்தார். அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும் என்றும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கலந்துரையாடல்களுக்கு எம்மையும் அழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# அரசின் பங்காளிக் கட்சி என்பதற்காக சகலதையும் ஆதரிக்க வேண்டியதில்லை!

## மைத்திரி போர்க்கொடி



பங்காளிகளாக இருந்தாலும் அரசாங்கத்தின் அனைத்து தீர்மானங்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையில் எந்தவொரு கட்சியும் தனித்து செயற்பட முடியாது என்பதால் சுதந்திரக் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் எனவும் அவர் கூறினார்.

இதன்மூலம் நாட்டை நேசிக்கின்ற, மக்களின் துயரங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய, ஊழல் மோசடி இல்லாத குழுவொன்றுடன் முன்னோக்கி செல்ல எதிர்பார்த்துள்ளோம் எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு அரசாங்கம் முறையான தீர்மானங்களை மேற்கொண்டு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் சீனாவில் இருந்துகொண்டுவரப்பட்ட உரம் தொடர்பாகத் தன்னிச்சையாக செயற்படாமல் நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலாசேனைகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.




# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு சுமந்திரனால் போட்டோபிரதி இயந்திரம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் ஊடாக போட்டோப் பிரதி இயந்திரம் இன்று (திங்கட் கிழமை) வழங்கப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த போட்டோப் பிரதி இயந்திரம் கையளிக்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்பாக வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் ஆகியோருடன் வலி.வடக்கு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ, வலி.வடக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் ஆகியோர் இணைந்து கல்லூரிச் சமூகத்தினரிடம் வழங்கிவைத்தனர்.

வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாட்டின் எல்லைகளை திறப்பதற்கு அமெரிக்கா முடிவு

20 மாதங்களின் பின்னர் தடுப்பூசி செலுத்திக்கொண்டு பயணிகளுக்கான நாட்டின் எல்லைகளை திறப்பதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது. கொரோனாத் தொற்று காரணமாக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்த தடை உத்தரவை பிறப்பித்திருந்தார்.

இந்த தடை பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட 30 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வரும் பயணிகளை பாதித்துள்ளது.

எனவே இன்று திங்கட்கிழமை முதல் அந்த தடை நீக்கப்பட்டு முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுக்கும் முயற்சியில், 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீனாவிலிருந்து வரும் பயணிகளுக்காக அமெரிக்கா எல்லை கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

பின்னர் பிரித்தானியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும், சீனா, இந்தியா, தென்னாபிரிக்கா, ஈரான் மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகளுக்கும் கட்டுப்பாடுகள் நீடிக்கப்பட்டன.

இந்நிலையில் புதிய விதிகளின்படி, தடுப்பூசி செலுத்திக் கொண்டு பயணிகள், பயணத்திற்கு முன்னரான எதிர் மறையான கொரோனா சோதனையை காட்டினால் தனிமைப்படுத்தல் இன்றி நாட்டுக்குள் வருவதற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# எரிபொருள் தாங்கி வெடித்ததில் 91 பேர் உயிரிழப்பு!



சியரா லியோன் தலைநகர் ப்ரீடவுனில் எரிபொருள் தாங்கியொன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் குறைந்தது 91 பேர் உயிரிழந்துள்ளனர். எரிபொருள் கொள்கலன் தீப்பற்றுவதற்கு முன்னர், அதிலிருந்த எரிபொருள் கசிந்தமையால் பரபரப்பான குறித்த வீதியில் பயணித்த வாகனங்கள் தீப்பற்றியுள்ளன.

கொள்கலனிலிருந்து எரிபொருள் கசிந்ததை தொடர்ந்து அதனை சேகரிப்பதற்காக சாரதிகள் முற்பட்ட வேளையில், வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் இதன் போதே திடீரென தீப்பற்றியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. விபத்து குறித்த செய்திகளை வெளியிட்டுள்ள உள்ளூர் ஊடகங்கள், விபத்துக்குள்ளான வாகனங்களை சுற்றி சடலங்கள் காணப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விபத்து குறித்து தமது கவலையை வெளியிட்டுள்ள ஜனாதிபதி ஜூலியஸ் மடா பயோ, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவேன் என உறுதியளித்துள்ளார்.

# உய்குர்கள், திபெத்தியர்களை ஒடுக்குவதற்கு சீனா புதிய வழிமுறைகளை உருவாக்கியது



மேற்கு மாகாணமான சின்ஜியாங்கில் உய்குர் மக்களை மேலும் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் புதிய உள் மற்றும் வெளிப்புற வழிமுறைகளை சீனா உருவாக்கியுள்ளது.

உய்குர் குடும்பங்களைக் கண்காணிப்பதற்காக முகாமையாளர்களை உள்ளடக்கிய புதிய அமைப்பு நிறுவப்பட்டுள்ளதோடு போலியாக உருவாக்கப்படும் ஹான் இன குடும்பங்களை கண்டறியும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தி சண்டே மோர்னிங் ஹெரால்ட் எழுத்தாளரான எரிக் பாக்ஷா, ஷின்ஜியாங்கில் சீனா மும்முனை மூலோபாயத்தை செயல்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது கூற்றுப்படி, முதலில், குறைந்தபட்சம் பத்து உய்குர் குடும்பங்களுக்கு பொறுப்பாக முகாமையாளர்களைப் பணியமர்த்துவதை உள்ளடக்கியது.

அடுத்து, உய்குர் குடும்பங்கள் மற்றும் ஹான் சீன பெரும்பான்மையினரின் போலி குடும்பங்கள் ஆகியவற்றை கண்காணிக்கும் செயற்பாட்டைக் கொண்டது. இறுதியாக, மத்திய அரசியல் மற்றும் சட்ட விவகார ஆணையகம் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன அனைத்தையும் மேற்பார்வை செய்வதை அடிப்படையாகக் கொண்டது.

கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முகாமையாளர்கள் உளவுத்துறை, பிரசாரம் மற்றும் மறுகல்வி ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளனர்.

அதேசமயம் உய்குர் உறவினர்களிடம் 'அரசை உள்ளீர்ப்பதற்காகவும்' நியமிக்கப்படுகிறார்கள், அதேநேரத்தில் அவர்களின் வீடுகளை மத அல்லது அரசியல் சீர்குலைவுக்கான அறிகுறிகளுக்காகப் பார்க்கிறார்கள்.

தீவிர சமூகக் காவல் மற்றும் தொலைபேசி செயலியான ஜாப்யாவின் பயனர்களைக் குறிவைத்தல் ஆகியவற்றையும் பெய்ஜிங் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு சமூகத்தையும் கண்காணிப்பதற்கு மத்திய அரசியல் மற்றும் சட்ட விவகார ஆணையகம் மூலம் ஷின்ஜியாங்கில் கிட்டத்தட்ட 9 ஆயிரம் பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஆய்வுக்கொள்கைக் குழுவின் கூற்றுப்படி, சீனாவின் சிறந்த ஃபயர்வோல் (இணையத் தடுப்புச்சுவர்) மூலம் தணிக்கை செய்யப்பட்ட திரைப்படங்கள், இசை மற்றும் பிற பொருள்களைப் பகிர இந்தச் செயலி மக்களை அனுமதிக்கிறது.

இந்நிலையில் சில காலத்திற்கு முன்பு, உய்குர் இன இளைஞரான அனாயத் அப் லிட்ஸ், ஜாப்யாவைப் பயன்படுத்தி கோப்பு பகிர்வு செயற்பாட்டை மேற்கொண்டமையால் எட்டு மாதங்கள் சீன அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டார்.

திபெத் மற்றும் ஷின்ஜியாங்கில் அதிகரித்து வரும் தடுப்புக்காவல்கள் உலக அளவில் கவலையை ஏற்படுத்தியது.

பல மனித உரிமை ஆர்வலர்கள் சீனாவில் திபெத்திய மத சிறுபான்மையினருக்கு எதிராக கைது செய்யப்பட்ட திபெத்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.

அவர்கள் பற்றிய வழக்குகள், நிறைவு பெறவேண்டி விசாரணைகள், அறியப்படாத குற்றச்சாட்டுகள் மற்றும் தீர்ப்புக்களுக்கு எதிராக குரல் எழுப்பியுள்ளனர்.

ஆனால் பெய்ஜிங் தனது சிறுபான்மையினரை சீனாவிற்குள் மட்டுமன்றி உலகம் முழுவதும் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாகி வருகின்றது.

இதனால் ஷின்ஜியாங் மற்றும் திபெத் ஆகியவை சிறப்பு கவனத்திற்கு வந்துள்ளன, மேலும் மனித உரிமைகளின் மொத்த மீறல்களும் உலகம் முழுவதும் சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.



# பயணிகள் தப்பியோடியமையால் ஸ்பானிஷ் விமான நிலையம் மூடல்

புலம்பெயர் பயணிகள் நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற சம்பவத்தை அடுத்து ஸ்பெயினின் விமான நிலையம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் மூடப்பட்டது.

மொராக்கோவில் உள்ள காசாபிளாங்காவில் இருந்து துருக்கியின் இஸ்தான்புல் நகருக்கு சென்று கொண்டிருந்த விமானம், மருத்துவ அவசரநிலை காரணமாக பால்மா டி மல்லோர்காவிற்கு திருப்பி விடப்பட்டது.

குறித்த விமானம் தரையிறங்கியதும், 21 பயணிகள் ஓடுபாதையின் குறுக்கே ஓடி, சுற்றுச்சுவர் வேலிக்கு மேல் பாய்ந்து தப்பிக்க முயற்சி செய்துள்ளனர்.

இருப்பினும் பொலிஸார் அவர்களை கைது செய்த நிலையில் அவர்கள் மீண்டும் தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்தில் இருந்து இந்த குழு தப்பிக்க முயற்சி செய்தமை தன்னிச்சையானதா அல்லது சட்டவிரோதமாக குடியேறுவதற்கான சதியா என பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# மெக்சிக்கோ சுங்கச்சாவடியில் விபத்து

## 19 பேர் உயிரிழப்பு



மத்திய மெக்சிக்கோவில் நெடுஞ்சாலை ஒன்றில் பார ஊர்தி ஆறு வாகனங்கள் மீது மோதியதில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடி அருகே இடம்பெற்ற இந்த விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தை அடுத்து பல வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன எனவும் சில வானங்கள் முற்றாக தீக்கிரையாகின எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு வாகனங்களில் பயணித்தவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மரங்களை வெட்டிட கேரள வன அதிகாரிகளால் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து



முல்லைப்பெரியாறில் உள்ள பேபி அணையை பலப்படுத்துவதற்காக, அந்த அணையின் கீழே உள்ள 15 மரங்களை வெட்டுவதற்கு கேரள வனத் துறையினர் அனுமதி அளித்தனர். இதையடுத்து இந்த அனுமதிக்காக கேரள முதலமைச்சர் பினராயி விஜயனுக்கு நன்றி தெரிவித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் கடிதம் எழுதினார். ஆனால் இந்த விவகாரம், கேரளாவில் சர்ச்சையாக மாறி இருக்கிறது.

கேரளாவின் கோரிக்கை முல்லைப்பெரியாறில் புதிய அணை வேண்டும் என்பதனை தவிர, பேபி அணையை பலப்படுத்துவது அல்ல என தெரிவித்து இது தொடர்பாக கேரள மாநில அரசை எதிர்க் கட்சிகள் கடுமையாக குற்றஞ் சாட்டியுள்ளன. இதைத் தொடர்ந்து பேபி அணையை பலப்படுத்துவதற்காக மரங்களை வெட்டுவதற்கு கேரள வனத்துறை வழங்கிய அனுமதியை கேரள மாநில அரசு ரத்து செய்துள்ளது. மேலும் இந்த அனுமதியை வழங்கிய வனத்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவு வழக்கத்துக்கு மாறான ஒன்று எனக்கூறியுள்ள கேரள வனத்துறை அமைச்சர் ஏ.கே.சசீந்திரன், இந்த உத்தரவை பிறப்பித்த முதன்மை தலைமை வன பாதுகாப்பாளர் தரப்பில் கடுமையான குறைபாடு உள்ளது எனக் கூறினார்.

பேபி அணையின் கீழே உள்ள 15 மரங்களை வெட்டித் தள்ளுவதற்கு அனுமதி அளித்தது பற்றி கேரள அரசுக்கு எதுவும் தெரியாது. அப்படி ஒரு நிலைமை என்றால் அதை அரசுக்கு தெரிவிக்க வேண்டும். எனக்கு தெரிந்தவரையில், இந்த முடிவு பற்றி முதலமைச்சர் அலுவலகத்துக்கோ, நீர்ப்பாசனத்துறை அமைச்சு அலுவலகத்துக்கோ அல்லது எனது அலுவலகத்துக்கோ எதுவும் தெரியாது. ஏதோ குளறுபடி நடந்துள்ளது. வெளியான செய்திகளில் இருந்து, மரங்களை வெட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர்கள் மரங்களை வெட்டித் தள்ளத் தொடங்கி விட்டனர் என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன். இது தொடர்பாக தொடர்புடைய அதிகாரிகளிடம் நாங்கள் அறிக்கை கேட்டுள்ளோம், என்று அவர் கூறினார்.



# வேளாண் சட்டங்களை நீக்குங்கள் மாயாவதி டுவிட்டரில் வலியுறுத்து

விவசாயிகளை வதைக்கின்ற புதிய வேளாண் சட்டங்களை நீக்குமாறு பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி நேற்று தனது ‘டுவிட்டர்’ பக்கத்தில் தெரிவித்திருக்கிறார்.

பா.ஜனதா, ‘அனைவருடன் இணைந்து வளர்ச்சி காண்போம்’ என்று அடிக்கடி சொல்கிறது. ஆனால், விவசாயிகள் நீண்டகாலமாக வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களின் நம்பிக்கையை அரசால் பெறமுடியவில்லை.

அப்படியானால், பா.ஜனதாவின் கோஷத்தை மக்கள் எப்படி நம்புவார்கள்? பெற்றோல், டீசல் மீதான வரியைக் குறைத்ததுபோல், தீபாவளிப் பரிசாக, விவசாயிகளை வதைக்கும் 3 வேளாண் சட்டங்களையும் ரத்துச் செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும், என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இந்தியாவில் 33 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துப் பற்றாக்குறை என தகவல்



கொரோனாப் பிரச்சினையால் இந்தியாவில் மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழைகளுக்கு சுகாதார வசதிகளும் ஊட்டச்சத்து உணவும் கிடைக்காமல் போயிருக்கலாம் என்ற கவலையின் அடிப்படையில் இது தொடர்பாக, தகவல் அறியும் உரிமை சட்டப்படி, இந்திய மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்திடம் தனியார் செய்தி நிறுவனமொன்று விவரங்களைக் கோரியிருந்தது. அதற்கு இந்திய மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் பதில் அளித்துள்ளது. ஊட்டச்சத்துபற்றாக்குறை பிரச்சினையை கண்காணிக்க கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட ‘போஷன் ட்ராக்கர்’ என்ற செயலியில் 34 மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் பதிவு செய்த விவரங்கள் அடிப்படையில் இந்தத் தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நிலைவரப்படி, இந்தியாவில் 33 லட்சத்து 23 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து பற்றாக்குறையால் அவதிப்படுகிறார்கள். இவர்களில் பாதிப்பேர் அதாவது 17 லட்சத்து 76 ஆயிரம் பேர் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையால் சிரமப்படுகின்றனர். இவர்கள் 1 முதல் 6 வயதுவரை உள்ள குழந்தைகள் ஆவர். கடந்த ஆண்டு நவம்பர் மாத நிலைவரப்படி 9 லட்சத்து 27 ஆயிரம் குழந்தைகள் மட்டுமே ஊட்டச்சத்து பற்றாக்குறையால் அவதிப்பட்டனர். அதனுடன் ஒப்பிடுகையில் இது ஒரே ஆண்டில் ஏற்பட்ட 91 சதவீத உயர்வாகும். மாநில வாரியாக பார்த்தால், மராட்டிய மாநிலம் 6 லட்சத்து 16 ஆயிரம் ஊட்டச்சத்து பற்றாக்குறை குழந்தைகளுடன் முதலிடத்தில் உள்ளது. பீகார், குஜராத், ஆந்திரா, கர்நாடகா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. ஊட்டச்சத்து பற்றாக்குறை கொண்ட ஒரு லட்சத்து 78 ஆயிரம் குழந்தைகளுடன் தமிழ்நாடு 7ஆவது இடத்தில் இருக்கிறது. கொரோனாவால் பாடசாலைகள் மூடப்பட்டதால் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் ஆகியவை நடைமுறைப்படுத்தப்படா நிலை ஏற்பட்டமைதான் ஊட்டச்சத்துப் பற்றாக்குறைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி பலவீனமாக இருப்பதால், எளிதில் நோய்கள் அவர்களைத் தாக்க வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# இலவச தானியங்கள் திட்டத்தை 6 மாதங்கள் நீடிக்க டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கோரிக்கை



கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகளால் மக்கள் பலருக்கு ஒருவேளை உணவுகூடக் கிடைப்பதில் சிரமம் இருப்பதால் இலவச தானியங்கள் வழங்கும் திட்டத்தை மேலும் 6 மாதம் நீடிக்குமாறு டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் இந்திய மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு கொரோனா பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டபோது, இந்திய மத்திய அரசு நாடு முழுவதும் 80 கோடி ஏழை மக்களுக்கு இலவசமாக உணவு தானியங்கள் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தியது. பின்னர், இரண்டாம் அலையின்போது இந்தத் திட்டம் இந்த ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. அதன் பின்னர் இந்தத் திட்டம் தொடராது என்று மத்திய அரசு அறிவித்துவிட்ட நிலையில், தற்போது இந்தத் திட்டத்தை மேலும் நீடிக்குமாறு டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கோரியுள்ளார்.

கொரோனா பெருந்தொற்றினால் வேலையின்மை அதிகரித்திருப்பதால், ஏழை மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க இலவச உணவு தானியங்கள் வழங்கும் திட்டத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்குமாறு அவர் கோரியுள்ளார்.

# நிமலன் சௌந்தரநாயகம் நினைவாக மட்டக்களப்பில் இரத்ததான நிகழ்வு



'உதிரம் கொடுத்து உயிரை காக்கும் உன்னத பணியில் இணைவோம்' என்ற தொனிப் பொருளில் முன்னாள் நாடளு மன்ற உறுப்பினர் அமரர் நிமலன் சௌந்தரநாயகம் அவர்களின் 21 ஆவது நினைவு நாளினை முன்னிட்டு இரத்ததான முகாம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் அதன் தலைவர் லோ.தீபாகரன் தலைமையில் முறக்கொட் டான்சேனை கிராம அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் இரா.சாணக்கியன்,முன் னாள் நாடாளுமன்ற உறுப் பினர்களான கி.துரைராஜசிங்கம், பா.அரியநேத்திரன், ஞா.சிறி நேசன், செங்கலடி பிர தேச சபை தவிசாளர்.சர்வானந்தன். மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களான கி.சேயோன், க.நல்லரெட்டனம், க.பகிதரன், யோகேஸ்வரன், க.கமல நேசன்.ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், வாலிபர் முன்னனி தலைவர் கி.சேயோன் ஆகியோர்களுடன் இணைந்து இளைஞர் யுவதிகளும் ஆர்வத் துடன் இரத்ததானம் செய்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நிமலன் சௌந்தரநாயகம் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இனம் தெரியாத நபர்களினால் மோட்டார் சைக்கிளில் வரும்போது கிரான் பிரதான வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது .

# திருகோணமலையில் நீர் விநியோகம் சீரின்மையால் அப்பகுதி மக்கள் கவலை

திருகோணமலையின் கிராம பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரசாங்கத்தினால்வழுங்கப்படும் நீர் விநியோகமானது, வழங்கப்படும் நாள்களில் சரி யாக கிடைப்பதில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரி விக்கின்றனர்.

இது தொடர்பில் அப்பிரதேச மக்கள் கூறுகையில், இரண்டு நாள்களுக்கு ஒருமுறைஅல்லது மூன்று நாள்களுக்கு ஒரு முறை மட் டுமே நீர் விநியோகிக்கப் படுகிறது. சில நேரங்களில் நீர் விநியோகிக்கப்படுவதில்லை. அதனால் எமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் வாழ்கின்றோம். கன்னியா, ஓசில், போன்ற கிராமங் களில் நிலத்தடி நீர் மட்டம் மிக ஆழத்தில் உள்ளதனால் கிணறுகளும் அமைக்க முடியவில்லை. ஏற் கனவே அமைக்கப்பட்டிருந்த கிணறுகளிலும்நீர்வற்றிவிட்டது. இதனால் குடிநீர் கிடைப்பதில் பெரும் நெருக்கடிகளை சந் தித்து வருகின்றோம்.

இது தொடர்பில் பல முறை நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையிடம் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில் லை. நீர் விநியோகிக்கப்படும் நேரங்களிலாவது எல்லோருக் கும் கிடைக்கத்தக்க வகையில் நீரை விநியோகித்தால் அல்லது அதற்குதக்க நடவடிக்கைகளை எடுத்தால் மிகவும் நல்லது என்பதே மக்களின் கோரிக்கை யாகும் என்றனர்.

# திருகோணமலை மாவட்ட ஊடக இல்லம் ஆரம்பம்




திருகோணமலை மாவட்ட ஊடக இல்லம், மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டி கோரளவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மத்திய பேருந்து தரிப்பிடத்தில் இந்த ஊடக இல்லம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம், திருகோணமலை மாவட்ட பிரஜைகள் குழு என்பன இவ் வில்லத்தை நிர்வகிக்க உள்ளன. மக்களை தெளிவூட்டக்கூடிய முக்கிய ஊடக சந்திப்புக்களை இந்த நிலையத்தில் மேற் கொள்வதற்கான வசதி வாய்ப் புகள் ஏற்படுத்திக்கொடுக்கப் பட்டுள்ளன.

ஊடகங்கள் ஒரு நாட்டைப் பொறுத்தவரை முக்கியமான பலம் வாய்ந்த துறையாக காணப்படுகின்றது. ஊடகங்கள் சரியானதகவல்களைமக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் தெரிவிக்க வேண்டும். அத்துடன் ஊடகங்கள் நடுநிலையுடன் செயல்படுவ தோடு ஒரு தலைப்பட்சாக செயற்படுவதை விடுத்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் காரண காரியங்களை வினவி அந்த செய்திகளை வெளி யிடு வது காலத்தின் தேவையாக அமைகின்றது.

மக்களுடைய பிரச்சினை களை உணர்ந்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப் பதற்கு ஊடகங்கள் முயற்சிக்க வேண்டும். பொருத்தமான அணுகுமுறைகளை கையாள் வதன் மூலமாக மக்களுடைய பிரச்சினை களுக்கு சுமூக மான முறையில் தீர்வுகளை பெற்றுக்கொள்ள கூடியதாக அமையும் என இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# பாண்டிருப்பில் பாரிய கடலரிப்பு

கல்முனையையடுத்துள்ள பாண்டிருப்பில் பாரிய கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கல் முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு கடற்கரைப்பகுதி யில் உள்ள 20க்கு மேற்பட்ட தென்னை மரங்கள், 30 மீற்றர் கொங்கிறீட் வீதிகள் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்டு அண்மையில் மீள்கட்டியெழுப் பப்பட்டு விரைவில் மகா கும்பாபி சேகம் காணவிருக்கும் அரு கிலுள்ள பாண்டி ருப்பு விஸ்ணு ஆலயத்திற்கு ஆபத்து ஏற்பட் டுள்ளது. ஆலயத்துக்கு முன்னா லுள்ள கொங்கிறீட் வீதி கடலினுள் அள்ளுண்டுள்ளது.

குறித்த கடலோரப்பகுதியில் கல் அணை இடுவதற்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என கடலோரப் பாதுகாப்பு திணைக்கள உத்தி யோகத்தர் அருணன் தெரிவித் தார். கடந்த சில நாட்களாக ஏற்பட்ட கடலரிப்பினால் பாண் டிருப்பு கடற்கரை பிரதேசத்தில் மரங்கள் வீழ்ந்துள்ளதுடன், புதிதாக நிர்மாணிக் கப்பட்டிருந்த வீதிகளின் ஒரு பகுதி முற்றாக இடிந்து கடலுக் குள் வீழ்ந்துள் ளதை காண முடிகின்றது.

இதனால் அப்பகுதியில் போக்கு வரத்து செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டுள்ளமையுடன் ஏற்க னவே சுனாமியால் பாதிக் கப்பட்டிருந்த இப் பிரதேச மக்கள் அச்சமடைந்த நிலை யில் காணப்படுகின்றனர்.



**பசளை தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து**

# டிராக்டர் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் ஆயித்தியமலை மக்கள் மட்டுநகர் நோக்கி பேரணி





வவுணதீவு மற்றும் ஆயித்தி யமலை பகுதி விவசாயிகள் நூற்றுக்கு மேற்பட்ட டிராக் டர்களிலும், மோட்டார்சைக் கிள்களிலும் மட்டக்களப்பு நகர் நோக்கி பவனியாக கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத் துள்ளனர். அரசாங்கம் பசளை யை வழங்க வேண்டும் என கோரி இந்த கவனவீர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு நகருக்குள் நுழைய முற்பட்ட குறித்த பேரணியை பொலிஸார் தடுத்து நிறுத்தி, குறித்த டிராக்டர்களை மட்டக்களப்பு நகருக்குள்ளே செல்ல அனுமதிக்க மறுத்துள் ளனர்.

எனினும், 'தம்மை உள்ளே செல்லவிடாது மறுத்தால் தாம் வீதியை மறித்து போராட்டம் மேற் கொள்வோம் எனவும், தம்மை உள்ளே செல்ல விட்டால் வீதியில் போக்குவரத்துக்கு எந்தவித இடையூறையும் ஏற்படுத்தாமல் தமது போராட்டத்தை முன்னெ டுப்போம் எனவும் போராட்டக் காரர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களுக்கு பொலிஸாரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

# ரயிலில் மோதி இளைஞன் சாவு

கொழும்பில் இருந்து திரு கோணமலைநோக்கிபயணித்த ரயிலில் மோதி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தம்பலகாமம் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இவ்வாறு ரயிலில் மோதி விபத்துக்குள்ளா னவர் முள்ளிப்பொத்தானை 95 ஆம் கட்டை சதாம் நகரைச் சேர்ந்த, ஹமீத் முபீத் (20வயது) எனவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர். விபத்துக்குள்ளான நபர் தொலைபேசியில் ஹெட்போன் அணிந்த வாறு பேசிக்கொண்டிருந்தார் எனவும், சக நண்பர்கள் புகையிரதம் வருவதை அவதானித்து கூச்ச லிட்டனர் எனவும் ஹெட்போன் அணிந்திருந்தமையினால் அவருக்கு சரியாக கேட்காத நிலையில் இருவர் அவரை நோக்கி ஓடிய போதும் ரயில் வேகமாக அவரை மோதி யதாகவும் சக நண்பர்கள் தெரி வித்துள்ளனர்.

மேலும் விபத்துக்குள்ளான வரின் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலம் கந்தளாய் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் மேல திக விசாரணைகளை தம்பல காமம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஆப்கானை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது நியூசிலாந்து அணி

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் - 12 சுற்றின் நேற்றைய நாளின் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி ஆப்கானிஸ்தான் அணியை 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி அரையிறுதிக்கான தனது நிலையை உறுதிசெய்துள்ளது.

குழு 2இற்கான இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில், 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 124 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. நஜிபுல்லா 73 ஓட்டங்களையும் குல்பதீன் 15 ஓட்டங்களையும் எடுத்தனர். நியூசிலாந்து அணியின் ட்ரெண்ட் போல்ட் 3 விக்கெட்டுக்களையும் சவுத்தி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 125 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி, 18.1 ஓவர்களில் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. அணித்தலைவர் கேன் வில்லியம்சன் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் டேவோன் கொன்வே ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஆப்கானிஸ்தான் அணியின் முஜிபுர் ரஹ்மான், ரஷித்கான் இருவரும் ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ட்ரெண்ட் போல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

நியூசிலாந்து அணி இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் அரையிறுதிக்குள் நுழைந்துள்ளது. ஆப்கானிஸ்தானும், இந்தியாவும் அரையிறுதி வாய்ப்பினை இழந்துள்ளன.

# மலிக்கின் அதிரடி அரைச்சதத்தினுதவியோடு ஸ்கொட்லாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான்

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி 72 ஓட்டங்களால் ஸ்கொட்லாந்து அணியை வென்றது.

சூப்பர் 12 சுற்றின் குழு 1 க்கான இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 189 ஓட்டங்களை அந்த அணி பெற்றுக்கொண்டது. பாபர் அசாம் 66 ஓட்டங்களையும் சொய்ப் மலிக் 54 ஓட்டங்களையும் எடுத்தனர். ஸ்கொட்லாந்து அணியின் கிறிஸ் க்ரேவ்ஸ் 2 விக்கெட்டுக் களைவீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணியால், 20 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 117 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. ரிச்சி பெரிங்டன் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களையும் ஜோர்ஜ் முன்சே 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பாகிஸ்தான் அணியின் சதாப் கான் 2 விக்கெட்டுக்களையும் ஷாயின் ஷா அப்ரிடி, ஹரிஸ் ரவூப் மற்றும் ஹசன் அலி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக 18 பந்துகளில் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களை எடுத்த சொய்ப் மலிக் தெரிவானார்.

சூப்பர் 12 சுற்றில் எந்தவொரு போட்டியிலும் தோற்காத அணியாக 10 புள்ளிகளோடு பாகிஸ்தான் அணி அரையிறுதியில் வரும் பதினோராம் திகதி ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ளவுள்ளது. மற்றொரு அரையிறுதிப் போட்டியில் வரும் 10 ஆம் திகதி இங்கிலாந்தும் நியூசிலாந்தும் ஒன்றையொன்று எதிர்த்தாடவுள்ளன



# அடுத்த ரி-20 உலகக் கிண்ணத்திலும் தகுதிச் சுற்றில் ஆடவுள்ளது இலங்கை



இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் நாட்டு கிரிக்கெட் அணிகள் அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில்தகுதிச்சுற்றில்விளையாடும்நிலைக்குள்ளாகியுள்ளன. இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிகள் சமீபத்திய ரி-20 அணிகள் தரவரிசையில் முறையே 9, 10ஆம் இடங்களைப் பெற்றிருப்பதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் அடுத்த ஆண்டுக்கான ரி-20 உலகக் கிண்ணத்தொடரினை நடத்தவுள்ள ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் உள்ளடங்கலாக, அண்மைய ரி-20 அணிகள் தரவரிசையில் முதல் எட்டு இடங்களுக்குள் உள்ள அணிகள், இந்தத் தொடரின் சூப்பர் 12 சுற்றுக்கு நேரடியாகத் தகுதி பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை தகுதிகாண் சுற்றில் விளையாட நேர்ந்திருந்த இலங்கை அணி, ஏற்கனவே தரவரிசையில் மிகவும் பின்தங்கியிருந்தமையால் இந்தத் தொடரில் பெற்ற வெற்றிகள் அணியின் முன்னேற்றத்துக்குப் பெரிதளவில் பங்களித்திருக்கவில்லை. ஆயினும், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இம்முறை விளையாடிய சூப்பர் 12 சுற்றின் போட்டிகள் அனைத்திலும் தோல்வியடைந்தபோதும் அந்த அணி, இதற்குமுன்னராகநியூசிலாந்துமற்றும்ஆஸ்திரேலிய அணிகளுக்கு எதிராகப் பெற்ற தொடர் வெற்றிகள், அவர்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சூப்பர் 12 சுற்றில் நேரடியாக விளையாடும் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. பங்களாதேஷ் அணியுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் அணியும் அம்முறை போலவே, நேரடியாக சூப்பர் 12 சுற்றில் விளையாடத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றது.



# பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் 6 ஆவது முறையாக ஜோகோவிச் சம்பியன்

பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடரில் 6 ஆவது முறையாக ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

பிரான்ஸில் நடந்த பரிஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் செர்பியாவைச் சேர்ந்தவரும் உலகின் முதல் நிலை வீரருமான நோவக் ஜோகோவிச் 4-6, 6-3, 6-3 என்ற நேர் செட்டில் ரஷ்யாவைச் சேர்ந்த டேனில் மெட்வடேவைத் தோற்கடித்து சம்பியனானார்.

இதன் மூலம் அமெரிக்க ஓபன் இறுதி ஆட்டத்தில் மெட்வடேவிடம் அடைந்த தோல்விக்கு ஜோகோவிச் பதிலடிகொடுத்திருக்கிறார். ஆயிரம் தரவரிசைப் புள்ளிகளை வழங்கும் இத்தகைய மாஸ்டர்ஸ் பட்டத்தை ஜோகோவிச் வெல்வது இது 37 ஆவது முறையாகும். இந்த வெற்றியையடுத்து வருடமொன்றின் இறுதியில் தரவரிசை முதலிடத்தை 7 ஆவது முறையாக ஜோகோவிச் தக்கவைத்துக்கொண்டார்.

# சிறப்பானதோர் அரசை ஆட்சிக்கு கொண்டுவர நாட்டு மக்களனைவரும் அணிதிரள வேண்டும்

## இராதாகிருஷ்ணன் அறைகூவல்



இந்த அரசு வீழ்வது நிச்சயம் அடுத்த தேர்தலில் சிறப்பானதொரு அரசை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு நாட்டு மக்கள் அணிதிரள வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான வீ. இராதாகிருஷ்ணன் அறைகூவல் விடுத் துள்ளார். அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து பொகவந்தலாவை யில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

மலையகபெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பளம் இன் னும் முறையாக – முழுமையாகக் கிடைக்கவில்லை.

சம்பளப் பிரச்சினை ஒருபுறம். மறுபுறத்தில் விலையேற்றம் என்று தாங்க முடியாத சுமை. சமையல் எரிவாயு, பால் மா மற்றும் இதர அத்தி யாவசியப் பொருள்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. இதனால் வாழ்க்கை சுமையும் அதிகரித்துள்ளது. ஆசிரியர்கள், மின்சார சபை ஊழியர்கள், துறைமுக ஊழியர்கள் என அனைவரும் இன்று வீதிக்கு இறங்கிவிட்டனர். யார் வேண்டுமானாலும் எப்படியும் பொருள்களை விற்கலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. எது எப்படி இருந்தாலும் இந்த ஆட்சி வீழ்வது உறுதி. நல்லதோர் அரசை உருவாக்க மக்கள் அடுத்த தேர்தலுக்குத் தயாராக வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# 6–9 தரங்களுக்கான கல்வி நடவடிக்கை தொடர்பாக இரண்டு வாரங்களில் முடிவு

## இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

தரம் 6 முதல் 09 ஆம் வகுப்பு மாண வர்களின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக அடுத்த இரண்டு வாரங்களில் தீர்மானிக்கப்படும் என இரா ஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று (திங்கட் கிழமை) உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், நிபுணர்களின் ஆலோ சனையின் அடிப்படையில் பாடசாலை கள் மீண்டும் திறக்கப்படும் எனத் தெரிவித் தார்.

சுகாதார அதிகாரிகள் அனுமதியை அடுத்து 200 இற்கும் மேற்பட்ட மாண வர்களைக் கொண்ட பாடசாலைகளில் தரம் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை யிலான ஆரம்பப் பிரிவுகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து தரம் 10, 11, 12 மற் றும் 13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று முதல்ஆரம் பிக்கப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர்சுசில்பிரேமஜயந்ததெரிவித்தார்.

இந்நிலையில் அடுத்த வாரம் ஏனைய தரங்களுக்கான கல்வி நடவடிக்கை களை ஆரம்பிப்பது தொடர்பாகப் பேச்சு நடத்தப்படும் என்றும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# 9 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை!




இலங்கையின் பல பகுதிகளில் தொடர்ந்து நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 9 மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, காலி, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, குருநாகலை, களுத்துறை, கொழும்பு மற்றும் மாத் தளை ஆகிய மாவட்டங்களுக்கு விதிக் கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை நீடிக் கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தின் ரத்தோட்ட மற்றும் உக்குவெல ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும், இரத்தி னபுரி மாவட்டத்தின் எஹெலியகொட, கலவான மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத் தின் அகலவத்த, புலத்சிங்கள மற்றும் பாலிந்தநுவர ஆகிய பிரதேச செயல கப்பிரிவுகளுக்கும், காலி மாவட்டத் தின்பத்தேகமபிரதேசசெயலகப்பிரிவுக் கும், குருநாகலை மாவட்டத்தின் நாராம்மல பிரதேச செயலகப்பிரிவுக் கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏனைய மாவட்டங்க ளின் 31 பிரதேச செயலகப்பிரிவுக ளுக்கு மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதி களில்வசிக்கும்மக்களைஅனர்தங்கள் தொடர்பாக அவதானமாக செயற்படு மாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள் ளது. மேலும், மண்மேடு சரிதல், கற் பாறைகள் சரிதல், நிலம் தாழிறங்குதல் மற்றும் மரங்கள் முறிந்து விழுதல் உள்ளிட்ட அனர்த்தங்கள் தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# நதிகளை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பு!

இலங்கையில் நதிகளை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் வசிப்போருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆற்று வடிநிலப் பகுதிகளில் வசிப்போருக்கு இவ்வாறு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தெதுருஓயா, மஹாஓயா, அத்தன கலுஓயா, களனி கங்கை, பென்தர ஆறு, கிங் கங்கை, நில்வளா கங்கை மற்றும் கலா ஓயா கங்கை உள்ளிட்ட ஆற்று வடி நிலப்பகுதிகளில் வசிப்போருக்கு எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்றும், நாளையும் குறிப்பிடத்தக் களவு நீர்மட்ட உயர்வை எதிர்பார்க்க முடியும் என எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. இந்த அவதான நிலைமை குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு வடிகாலமைப்புத் திணைக்களம் எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

மேலும் இன்றும், நாளையும் மழையுட னான காலநிலை மேலும் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம் மற்றும் நுவரெலியா மாவட்டம் என்பனவற் றின் சில இடங்களில் 150 மில்லிமீற்றர் மழைபெய்யும்எனஎதிர்வுகூறப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாய நிலைமைகளும் காணப்படுகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு வேலைகளுக்கு செல்ல எதிர்பார்ப்பவர்களுக்கு எச்சரிக்கை!

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருகிறோம் எனக் கூறி பணம் மோசடி செய்பவர்கள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டுவேலைவாய்ப்புபணியகம் தெரிவித்துள்ளது.

தென் கொரியா, ஜப்பான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் தொழில் வழங்குவதாகக் கூறி பண மோசடி இடம்பெறுவதாகப் பணியகம் தெரிவித் துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் குறித்த நாடுகளுக்காக நடைமுறைப்படுத்தி யுள்ள ஆள்சேர்ப்பு வேலைத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரு கிறோம் என பண மோசடி செய்யப்பட்டு வருவதாகபணியகம்குறிப்பிட்டுள்ளது.

தென் கொரியாவில் வேலைகளுக் கான ஆள்சேர்ப்பு மற்றும் பயிற்சி நட வடிக்கைகள் பணியகத்தால் மாத்திரமே முறையாக மேற்கொள்ளப்படுகின்றன என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் சுட்டிக்காட்டியுள் ளது.

இரு நாடுகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத் துக்கமைய, ஜப்பானில் வேலைவாய்ப் புகள் ஆள்சேர்ப்பு பணியகம் மற்றும் பல உரிமம் பெற்ற வேலைவாய்ப்பு நிறுவனங்களால் மாத்திரே மேற் கொள்ளப்படுவதாகப் பணியகம் அறிவித்துள்ளது.

இதே முறையே இஸ்ரேல் நாட்டுக் குச் செல்லவும் அமுல்படுத்தப்பட்டுள் ளது. குறிப்பிட்ட நாடுகளில் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனங்களால் செல வுகள் மற்றும் பணியகப் பதிவுக் கட்ட ணங்கள் மாத்திரமே அறவிடப்படு கின்றன.

சமூக வலைத்தளங்கள் மற்றும் பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி இவ்வாறான தொழில் மோசடிகள் மேற் கொள்ளும் நபர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

எனவே இவ்வாறான மோசடியாளர் களிடம் சிக்கிக் கொள்ள வேண்டாம் என வெளிநாட்டுப் பணியகம் நாட்டு மக் களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# வட்டுக்கோட்டையில் மாணவன் திடீர் சுகவீனம் காரணமாக சாவு



வட்டுக்கோட்டையில் மாண வன் ஒருவர் சுகவீனம் கார ணமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். நித்தி ரைக்குச் சென்ற மாணவ னுக்கு காலையில் உடல் நிலையில் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள் ளார். வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் குறித்த மாணவன் உயிரிழந் துள்ளார். வட்டுக் கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொல்புரம் கிழக்கு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் உயர் தரப்பிரிவில் கல்விபயிலும் மகிந்தன்என்ற17 வயதுமாண வனே இவ்வாறு உயிரி ழந்துள்ளார். இதுதொடர்பான மேலதிகவிசாரணைகளைவட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.11.2021இல் வெளியிடப்பெற்றது.